## சுருக்கம்

**தொழில்நுட்பக் கல்வி– அறிவிப்பு 2021–22– அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் இரண்டாவது சுழற்சி முறையில், அமைப்பியல் மற்றும் இயந்திரவியல் பட்டயப் படிப்புகளை தமிழ் வழியில் தொடங்க அனுமதி வழங்குதல்– ஆணை வெளியிடப்படுகிறது.**

---

**உயர்கல்வி(பி1)த்துறை**

**அரசாணை (நிலை) எண். 196** | **நாள் 18.10.2021**
**பிலவ வருடம், ஐப்பசி 1,**
**திருவள்ளுவராண்டு 2052**

**படிக்க**

1. மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சரின் அறிவிப்பு, நாள் 26.08.2021.
2. தொழில்நுட்பக் கல்வி இயக்குநரின் கடித எண்.33781/ஓய்2/சிடிசி/2021, நாள் 1.10.2021.

-------

**ஆணை**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், 26.08.2021 அன்று நடைபெற்ற உயர்கல்வித்துறை மானியக் கோரிக்கை எண்.20 மீதான விவாதத்தின் போது மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்களால் பின்வரும் அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது:–

"தமிழ்வழியில் கல்வி பயிலும் மாணாக்கர்களுக்கு, அரசுப் பணிகளில் 20 விழுக்காடு ஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது. பட்டயப் படிப்பில் பயிற்றுமொழியாக ஆங்கிலம் மட்டுமே இதுவரை இருந்து வருகிறது. முதற்கட்டமாக, அடுத்த கல்வியாண்டில், அமைப்பியல் (Civil Engineering) மற்றும் இயந்திரவியல் (Mechanical Engineering) பட்டயப் படிப்புகள் தமிழ் வழியில் தொடங்கப்படும். படிப்படியாக இதர பட்டயப் படிப்புகளும் தமிழ் வழியில் தொடங்கப்படும்".

2. மேற்காணும் அறிவிப்பினை செயல்படுத்த ஏதுவாக தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மூன்றாண்டு அமைப்பியல் மற்றும் இயந்திரவியல் பட்டயப் படிப்புகளை பின்வரும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் அதன் ஒப்பளிக்கப்பட்ட மாணாக்கர் சேர்க்கை எண்ணிக்கைக்கு மிகாமல், வரும் கல்வியாண்டில் (2022–23) பயிற்று மொழி தமிழ் மொழியில் துவங்க திட்டமிடப்பட்டுள்ளது என்றும், படிப்படியாக இதர பட்டயப்

படிப்புகளும் தமிழ் வழியில் தொடங்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார். மேலும், இரண்டாம் சுழற்சி முறையில் மூன்றாண்டு பட்டயப் படிப்புகள் பயிற்று மொழி தமிழாக மாற்றம் செய்யப்படும் பலவகை தொழில் நுட்பக் கல்லூரிகள் மற்றும் அதன் ஒப்பளிக்கப்பட்ட மாணவர் சேர்க்கை விகிதத்தினை தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் பின்வருமாறு அட்டவணையிட்டுள்ளார்;-

| வ. எண். | பலவகை தொழில் நுட்பக் கல்லூரியின் பெயர் | பட்டயப் படிப்பின் விவரம் | ஒப்பளிக்கப்பட்ட மாணாக்கர் சேர்க்கை எண்ணிக்கை | பயிற்று மொழி |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | மைய பலவகை தொழில்நுட்பக் கல்லூரி, சென்னை | அமைப்பியல் (Civil) (இரண்டாவது சுழற்சி முறை) | 60 | தமிழ் வழி |
| | | இயந்திரவியல்(Mechanical) (இரண்டாவது சுழற்சி முறை) | 140 | தமிழ் வழி |
| 2. | அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி, கோயம்புத்தூர் | அமைப்பியல்(Civil) (இரண்டாவது சுழற்சி முறை) | 60 | தமிழ் வழி |
| | | இயந்திரவியல்(Mechanical) (இரண்டாவது சுழற்சி முறை) | 60 | தமிழ் வழி |
| 3. | அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி | அமைப்பியல்(Civil) (இரண்டாவது சுழற்சி முறை) | 60 | தமிழ் வழி |
| | | இயந்திரவியல்(Mechanical) (இரண்டாவது சுழற்சி முறை) | 60 | தமிழ் வழி |
| 4. | தமிழ் நாடு அரசு பலவகை தொழில் நுட்பக் கல்லூரி, மதுரை | அமைப்பியல்(Civil) (இரண்டாவது சுழற்சி முறை) | 60 | தமிழ் வழி |
| | | இயந்திரவியல்(Mechanical) (இரண்டாவது சுழற்சி முறை) | 60 | தமிழ் வழி |
| 5. | அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி, நாகர்கோவில் | அமைப்பியல்(Civil) (இரண்டாவது சுழற்சி முறை) | 60 | தமிழ் வழி |
| | | இயந்திரவியல்(Mechanical) (இரண்டாவது சுழற்சி முறை) | 60 | தமிழ் வழி |

3. எனவே ஒப்பளிக்கப்பட்ட மாணாக்கர் சேர்க்கை எண்ணிக்கைக்கு மிகாமல் அமைப்பியல் மற்றும் இயந்திரவியல் பட்டயப்படிப்புகளை (Diploma in Civil Engineering and Diploma in Mechanical Engineering) தமிழ் வழியில் இரண்டாவது சுழற்சி முறையில் மேற்காணும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் நடத்துவதற்கு அனுமதி வழங்குமாறு தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார். மேலும், அமைப்பியல் மற்றும் இயந்திரவியல் துறையில் உள்ள மிகவும் பிரபலமான புத்தகங்களை தமிழாக்கம் செய்யும் பணியை தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் மேற்கொள்ளும் என்றும் தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

4. தொழில்நுட்பக் கல்வி இயக்குநரின் மேற்காண் கருத்துருவினை அரசு ஆய்வு செய்து, மைய பலவகை தொழில்நுட்பக் கல்லூரி, சென்னை, அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி, கோயம்புத்தூர், அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி மதுரை, அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி, நாகர்கோவில் ஆகிய பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் இரண்டாவது சுழற்சி முறையில், அமைப்பியல் மற்றும் இயந்திரவியல் பட்டயப் படிப்புகளை (Diploma in Civil Engineering and Diploma in Mechanical Engineering) தமிழ் வழியில், அப்பட்டயப்படிப்புகளுக்கு ஏற்கனவே ஒப்பளிக்கப்பட்ட மாணாக்கர் சேர்க்கை எண்ணிக்கைக்கு மிகாமல் பயிற்றுவிப்பதற்கு தொழில்நுட்பக்கல்வி இயக்குநருக்கு அனுமதி அளித்து ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தா.கார்த்திகேயன்,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
தொழில்நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை – 25.
முதல்வர், சம்மந்தப்பட்ட அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள்
(தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் வழியாக)
நகல்:
உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
உயர் கல்வித் துறை, முதன்மைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலர், சென்னை–9.
இ.கோ/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

18-10-2021
பிரிவு அலுவலர்.